**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வீட்டுவசதி - பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்காக ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள், நிலுவையில் உள்ள வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை தள்ளுபடி செய்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (கூட்1) துறை**

அரசாணை (நிலை) எண். 128 நாள் 12-04-2005

படிக்கப்பட்டது:-

1) அரசாணை (நிலை) எண் 492, வீட்டுவசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சித் (கூட்1) துறை, நாள் 11.12.2001

2) வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடித எண்.2236/05/ ஆ4, நாள் 5.3.2005.

ஆணை:

ஊரக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக உறட்கோ (HUDCO) மூலமாக, வழங்கப்பட்ட கடன்களில், 31.3.2001 வரை நிலுவையுள்ள அசல் தொகையை 31.3.2002க்குள் செலுத்தினால் அப்பயனீட்டாளர்கள் 31.3.2001 வரை செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை தள்ளுபடி செய்து மேலே 1.ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஆணை வெளியிட்டது:-

(1) மொத்த தள்ளுபடித் தொகை ரூபாய் 100.00 கோடி அல்லது கூட்டுறவு சங்கங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் இவற்றில் எது குறைவோ அந்த தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(2) தள்ளுபடி தொகை அரசுக்கு வரவேண்டிய கடன் தொகைக்கு ஈடு செய்யப்படும். (will be adjusted against the dues from the society to Government)

2. மேற்காணும் சலுகையை முழுமையாக பெறும் பொருட்டு, நிர்ணயிக்கப்பட்ட கால அளவு மேலும் 30.9.2002 வரை நீட்டித்து 4.7.2002 அன்று அரசு ஆணை வெளியிட்டது. கால நீட்டிப்பு வழங்கிய பிறகும் 71,745 பயனாளிகள் மட்டுமே வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக்கட்டண தள்ளுபடி பெற்ற வாயிலாக ரூ.32 கோடி அளவிற்கு பயனடைந்துள்ளார்கள்.

3. மேலே இரண்டில் கண்ட கடிதத்தில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் தமிழகம் முழுவதும் தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் காரணமாக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் கடன் பெற்ற வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களாகிய பொருளாதாரத்தில் நலிவுற்ற வறியோர்கள் போதிய வேலை வாய்ப்புகளும், வருவாயும் இல்லாத சூழ்நிலையிலும், சென்ற 26.12.2004-இல் தோன்றிய சுனாமிப் பேரலையின் சீற்றத்தினாலும் தவணை கடந்த நிலுவைத் தொகையில், தவணை கடந்த அசல் ரூ.89.24 கோடி, வட்டி ரூ.142.13 கோடி அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ரூ.92.04 கோடி ஆக மொத்தம் ரூ.323.41 கோடி தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு திருப்பி செலுத்திட இயலவில்லை என தெரிவித்துள்ளார். எனவே 31.3.2005-இல் நிலுவையாக உள்ள தவணை தவறிய அசல் தொகையை உறுப்பினர்கள்

31.3.06-க்குள் முழுமையாக செலுத்தினால் அவர்கள் 31.3.05-இல் செலுத்த வேண்டிய தவணை தவறிய வட்டி, தவணை தவறிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவை முழுமையாக தள்ளுபடி செய்யும்படியும், ஏற்கனவே அறிவித்த ரூ.100.00 கோடி தள்ளுபடி தொகையிலிருந்து மிகுதி தொகையான ரூ.68 கோடியை அரசு அனுமதித்தால் மேலும் 2,53,428 பயனீட்டாளர்கள் பயனடைவார்கள் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அரசை கேட்டுக் கொண்டார்.

4. இந்நிலையில் அரசு, கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளரின் பரிந்துரையை ஏற்று 31.3.05இல் நிலுவையில் உள்ள அசல் தொகையை 30.6.2006க்குள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்கள் செலுத்தினால், அப்பயனீட்டாளர்கள் 31.3.2005இல் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை தள்ளுபடி செய்யலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வெளியிடப்படுகிறது:-

1) மொத்த தள்ளுபடித் தொகை ரூ.68 கோடி அல்லது கூட்டுறவு சங்கங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் இவற்றில் எது குறைவோ அந்த தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2) தள்ளுபடி தொகை அரசுக்கு வர வேண்டிய கடன் தொகைக்கு ஈடு செய்யப்படும். (will be adjusted against the dues from the Federation to Government)

5. இத்திட்டத்தை செயல்படுத்தத் தேவையான வழிகாட்டி நெறிமுறைகள் (ழூரனைநடதைநேள) வீட்டு வசதி கூட்டுறவு சங்க பதிவாளர் அவர்களால் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ
அரசு செயலாளர்

பெறுநர்

வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-20.
தனி அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி இணையம், சென்னை-7.
அனைத்து கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்.
வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மூலமாக.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
மாநில கணக்காய்வத் தலைவர், சென்னை-18.
மாநில கணக்காய்வுத் தலைவர்(பெயரில்), சென்னை-18.
மாநில கணக்காய்வத் தலைவர்(தணிக்கை), சென்னை-18.
மாநில கணக்காய்வத் தலைவர்(சிஏஎஸ்), சென்னை-18.
அனைத்து வீட்டுவசதி துறை பிரிவுகள்.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர்(வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலரின் நேர்முக உதவியாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
ஆளுநரின் தனிச் செயலர், சென்னைஎிஎி-32.
இகோ/உதிரி.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்